
# விவாகரத்து மற்றும் மறுமணம்



## Divorce and Re-Marriage

# தள்ளிவிடுதல் (விவாகரத்து) மற்றும் மறுமணம் பற்றி இயேசு கிறிஸ்துவும் அப்போஸ்தலர் பவுலும் என்ன கூறினார்கள்?


அன்பு சகோதர சகோதரிகளே, நாம் தெரிவு செய்திருக்கும் இந்தப் பாடம் பேசுவதற்கு இனிமையான ஒன்று அல்ல ஆனால், அவ்வப்போது இதைக்குறித்து ஆராய்வது நமக்கு மிக அவசியமாக உள்ளது. இதன் தலைப்பை ஏன் இவ்வாறு வைத்துள்ளோம்? ஏனென்றால் அதைப்பற்றி தான் நாம் வேதவசங்களில் தேடி வாசிக்கப்போகிறோம்.





**"தள்ளிவிடுதல்(விவாகரத்து) மற்றும் மறுமணம் பற்றி இயேசு கிறிஸ்துவும் அப்போஸ்தலர் பவுலும் என்ன கூறினார்கள்?"** என்று இப்போது ஆராய்வோம்.


**இந்த பாடம் உலகத்தில் உள்ள எல்லாப்பகுதிகளில் வசிக்கும் அனைத்து வேத மாணவர்களுக்கும் சென்றடைய வேண்டிய முக்கியமான பாடமாகும் ஏனென்றால் இன்று தள்ளிவிடுதல்(விவாகரத்து) மற்றும் மறுமணம் என்ற காரியங்கள் எங்கும் நடைமுறையில் உள்ளன.**

உலகெங்கிலும் ஏரத்தாள 50% திருமணங்கள் விவாகரத்தில் முடிகின்றன என்று சொல்லப்படுகிறது. ஆச்சரியத்திற்குரிய விஷயம் என்னவென்றால் உலத்திலிருந்து இந்த விஷயம் தேவப்பிள்ளைகளாகிய நமக்குள்ளும் ஊடுறுவியுள்ளது. இதை லேஸாக எடுத்துக்கொண்டால் பொருட்படுத்தாமல் விட்டுவிடுவோம் ஆனால் இதைக்குறித்து நாம் வேதத்தை ஆராய்ந்து தெளிவான புரிதல் உள்ளவர்களாக இருக்கவேண்டும் என்றே நம் தேவன் விரும்புகிறார் என்று நாம் நினைக்கிறோம்.






ஏழாம் தூதராகிய நமது சகோதரர் ரஸ்ஸலின் எழுத்துக்களிலிருந்து நாம் காலங்களைக் குறித்தும் அறுவடைக்கால சத்தியங்களைக்குறித்தும் தெரிந்துக்கொண்டோம். அப்படியிருக்க, இந்த விஷயத்தைக்குறித்து எழுதுவதை அவர் ஏற்றதாக நினைத்ததால் தான் வேதாகமப் பாடங்களில் **(குறிப்பாக Volume 6 மற்றும்** ரீப்பிரின்ட்ஸில்) இந்த விஷயத்தைக்குறித்து எழுதியுள்ளார், **சகோதரர் ரஸ்ஸலின் எண்ணங்களோடு இணங்கிய கருத்துக்களையே நாம் இங்கு முன்வைத்துள்ளோம்.**




தள்ளிவிடுதல்(விவாகரத்து) மற்றும் மறுமணம் குறித்து உலகெங்கிலும் உள்ள சகோதரர்களிடையே பல வேருபட்டக் கருத்துக்கள் உள்ளன. இக்கருத்துக்கள் தான் நம்மை வேத வசனங்கள் என்னக் கூறுகின்றன என்று ஆராய்ந்துப் பார்க்கவேண்டிய அவசியத்தை உணர்த்தின. ஒருவேளை நாம் திருமணம் ஆகாதவராயிருந்தால்,



**"இது என்னை எப்படி பாதிக்கும் என்று"**

நாம் சொல்லலாம். ஒருவேளை நமக்கு ஒரு நல்லத் திருமண வாழ்க்கை அமைந்திருந்ததென்றால்,

**"இதைப்பற்றி எனக்கு கவலை இல்லை"**

என்று நாம் சொல்லாம். ஆனால், கிறிஸ்துவின் சரீர அங்கங்களாகிய நம்மில் ஒருவருக்கு இப்பிரச்சனைகள் உருவாகுமென்றால் அது நம் அனைவரையுமே பாதிக்கும் என்று நாம் உணர்ந்து கொள்கிறோம்.

# Impact upon us

இந்த தார்மீக பிரச்சினையில் நாம் ஒவ்வொருவரும் நமது தரநிலையை உயர்ந்ததாகவோ அல்லது தாழ்ந்ததாகவோ வைத்திருக்கிறோம். நாம் எந்தப் பக்கம் உள்ளோம் என்று தேவன் கவனித்திக் கொண்டிருக்கிறார். தனிப்பட்ட நிலையில், பலவீனமான ஆவிக்குரிய நிலையில் உள்ள சகோதர சகோதரிகளுக்கு திருமண வாழ்வில் பிரச்சனைகள் வரும் பொழுது, அவர்கள் உதவியையும் உதாரணங்களையும் தேடுகிறார்கள்.

உடன்படிக்கை செய்தவர்களானாலும் சரி உடன்படிக்கை செய்யாதவர்களானாலும் சரி, தள்ளிவிடுதல்(விவாகரத்து) மற்றும் மறுமணம் குறித்து வேத மாணவர்களின் கருத்துக்களை அறிந்து கொள்ள விரும்புகிறார்கள்.


நிச்சயமாக வேத வசனங்கள் இப்பிரச்சனைகளைப் பற்றி தெளிவாக நமக்கு வளக்குகின்றன.




இயேசு கிறிஸ்து மற்றும் அப்போஸ்தலர் பவுல் இப்பிரச்சனைகளைப் பற்றி தெளிவாக நமக்கு விளக்குகின்றார்கள். **மத்தேயு 5: 27ஆம்** வசனத்திலிருந்து நாம் இப்பொழுது வாசிக்கலாம். **"விபசாரஞ் செய்யாதிருப்பாயாக என்பது பூர்வத்தாருக்கு உரைக்கப்பட்டதென்று கேள்விப்பட்டிருக்கிறீர்கள்."** இங்கு "பூர்வத்தாருக்கு உரைக்கப்பட்டது" என்று இயேசு கிறிஸ்து மோசேயின் நியாயப்பிரமாணத்திலுள்ள கட்டளையை குறிப்பிடுகிறார். அதோடு மட்டுமல்லாமல் தொடர்ந்து **மத்தேயு 5ஆம்** அதிகாரத்தை வாசிக்கும் பொழுது இந்த தரநிலையை இன்னும் உயர்த்துகிறார்.




**"எப்படியெனில் சரீரப் பிரகாரமாக இல்லாவிட்டாலும் இத்தவறை மனதளவில் செய்தாலும் அது விபசாரம ஆகும். திருமணமான ஒருவர் தன் மனைவியல்லாத மற்றொரு பெண்ணை இச்சையோடு பார்த்தாலே தன் மனதில் விபசாரம் செய்துவிட்டார் என்பது இதன் பொருளாகும்."**




சிலர் அப்படி ஒரு தவறான எண்ணம் மனதில் தோன்றினாலே விபசாரம் என்று புரிந்துக் கொள்கிறார்கள் ஆனால் நான் அப்படி நினைக்கவில்லை.

**இயேசு கிறிஸ்து கூருவது என்னவென்றால் ஒரு தவறான எண்ணம் மனதில் தோன்றும் பொழுது அதை ஊக்குவிப்பதும், சிந்தனையில் இடம் கொடுப்பதும், வளர்ப்பதுமே விபசாரம் ஆகும் ஏனென்றால் அதை சரீரப் பிரகாரமாக செய்வதற்கான சந்தர்ப்பம் கிடைக்காததால் மட்டுமே அத்தவறு நடைபெறவில்லை.** ஏன் இவ்வாறு நான் நினைக்கிறேன் என்றால், தவறான எண்ணங்கள் பழைய மனிதன் மூலமாகவோ பிசாசானவன் மூலமாகவோ, விளம்பர பலகைகள் மூலமாகக் கூட நமக்கு வரலாம்.


**அப்பொழுது ஏற்கனவே நான் மனதில் விபசாரம் செய்துவிட்டேன், எனவே உன்மையில் செய்தால் என்ன? எப்படியும் நான் தவறு செய்ததாக தானே அர்த்தம் என்ற எண்ணம் நமக்கு வரவே கூடாது.**

**ஒருவேளை சில பலவீனமானவர்கள் இப்படிப்பட்ட எண்ணங்களை கொண்டிருந்தால் அது ஒரு பாவ வியாதியாகும்.**

பரம வைத்தியராகிய நம் பிதாவாகிய தேவனிடம் ஜெபித்து நிச்சயமாக அவர்கள் இவற்றை ஜெயித்துவிடலாம்.



இப்பொழுது நாம் **மத்தேயு5:29 மற்றும்30ஆம் வசனங்களை** தியானிப்போம். ***“உன் வலது கண் உனக்கு இடறலுண்டாக்கினால், அதைப் பிடுங்கி எறிந்து போடு; உன் சரீரம் முழுவதும் நரகத்தில் தள்ளப்படுவதைப்பார்க்கிலும், உன் அவயவங்களில் ஒன்று கெட்டுப்போவது உனக்கு நலமாயிருக்கும். உன் வலது கை உனக்கு ர்க்கிலும், உன் அவயவங்களில் ஒன்று கெட்டுப்போவது உனக்கு நலமாயிருக்கும். இடறலுண்டாக்கினால், அதைத் தறித்து எறிந்து போடு; உன் சரீரம் முழுவதும் நரகத்தில் (மூலபிரதியில் கெஹனா) தள்ளப்படுவதைப்பார்க்கிலும் உன் அவயவங்களில் ஒன்று கெட்டுப்போவது நலமாயிருக்கும்”***




இயேசு கிறிஸ்து இங்கு கூருவதைதான் அப்போஸ்தலர் பவுலும் **எபிரெயர் 12:13ல்** கூருகிறார். ***“முடமாயிருக்கிறது பிசகிப்போகாமல் சொஸ்தமாகும்படிக்கு, உங்கள் பாதங்களுக்கு வழிகளைச் செவ்வைப்படுத்துங்கள்.”*** ***இடறலுண்டாக்கின்றவை தொலைக்காட்சி அல்லது வானொலி நிகழ்சிகளாக இருக்குமென்றால் - அவைகளை பார்க்காதீர்கள், கேட்காதீர்கள் மாறாக தேவனைப் போற்றும் பாடல்களை கேளுங்கள். உங்கள் வேலைஸ்தலத்தில் இடறலுண்டாக்கின்ற காரியங்கள் இருந்தால் ஒருவேளை இடமாற்றம் செய்ய வாய்ப்பில்லையெனில் வேலையையே வட்டுவிடுவது நல்லது என்ற ஆலோசனையை நான் வலியுறுத்துகிறேன்.***

***கெஹனா என்ற இரண்டாம் மரணத்திற்குள் செல்வதைவிட இந்த முடிவே மேன்மையானதாக இருக்கும். சிலர் இப்படிபட்ட உருதியான முடிவை எடுக்கவேண்டிய நிலையில் இருக்கலாம். கொள்கைகளுக்காக வேலையை இழந்த சகோதரர்களையும் சிறை சென்ற சகோதரர்களையும் கூட எனக்கு தெரியும். இந்த பாவ ஆசையை தூண்டுகிற ஒரு சூழ்நிலையில் நீங்கள் வாழ்துகொண்டிருந்தால், முழுமுயற்சி செய்து வழிகளைச் செவ்வைப்படுத்துங்கள், ஏனென்றால் நம்***

குணத்தில் பலவீனமாகிய இந்த பாவம் நம்மை முடமாக்கி நித்திய ஜீவனுக்கு செல்லும் பாதையிலிருந்து நம்மை விழத்தள்ளிவிடும்.

இயேசு கிறிஸ்து இதை குறித்து பேசுகிறார் என்றால், அது நிச்சயமாக முக்கியமான ஒரு விஷயமாகும். எனவே, இப்படியொரு சூழ்நிலையில் நீங்கள் வாழ்துகொண்டிருந்தால், முழுமுயற்சி செய்து என்ன கடினமான முடிவுகள் எடுக்கவேண்டியதாக இருந்தாலும் சரி, அதிலிருந்து வெளியே வந்து விடுங்கள்.


**மத்தேயு:5:31 ஆம்** வசனத்தில் அவர் மீண்டுமாக **29ஆம்** வசனத்தை தொடர்பு படுத்துகிறார். – **"தன் மனைவியைத் தள்ளிவிடுகிற எவனும் தள்ளுதற்சீட்டை அவளுக்கு கொடுக்கக்கடவன் என்று உரைக்கப்பட்டது."** இதுவும் மோசேயின் நியாயப்பிரமாணத்திலுள்ள கட்டளையாகும். **32ஆம்** வசனித்தில் மேலும் இயேசு கிறிஸ்து இவ்வாறு கூறுகிறார்:

***"நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; வேசித்தன முகாந்தரத்தினாலொழிய தன் மனைவியைத் தள்ளிவிடுகிறவன், அவளை விபசாரஞ்செய்யப்பண்ணுகிறவனாயிருப்பான்; அப்படித் தள்ளிவிடப்பட்டவளை விவாகம் பண்ணுகிறவனும் விபசாரஞ்செய்கிறவனாயிருப்பான்."***

# "நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்"

**"நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்"** என்ற வார்த்தைகளை **அவருடைய அதிகாரத்தை** வலியுறுத்தவே அவர் பயன்படுத்துகிறார்.

உங்கள் ஆசாரியர்கள் இதுவரை நியாயப்பிரமாணத்தின் கட்டளைகளை போதித்திருக்கலாம், ஆனால், **நான் உங்களுக்கு தெளிவாக இவ்வார்த்தைகளை சொல்கிறேன், இதில் தர்க்கம் செய்வதற்கு ஒன்றுமில்லை என்பது இதன் பொருளாகும்.**



வேசித்தன முகாந்தரத்திரம் என்ற வார்த்தைக்கு

ஆங்கிலத்தில் **Adultery** என்ற வார்த்தை

கொடுக்கப்பட்டுள்ளது.

**Adultery** என்றால்

# கலப்படம்



என்றுஅர்த்தம்.

**Meanings of adultery in Tamil**

*noun* - *1.* பிறர்மனை உறவு 2.பிறன்மனைசேரல் 3.பிறன்மனை நாடல் 4. பிறன்மனை நயத்தல் 5. கூடா ஒழுக்கம், *6.* ஒழுக்கக்கேடு

# திருமணம் என்றால் என்ன?

ஒரு ஆணும் பெண்ணும் இனைந்து இருவராயிராமல் ஒரே மாம்சமாயிருக்கிறார்கள் என்று அர்த்தம். ஒரு மூன்றாவது நபரை இதில் நீங்கள் சேர்த்துக்கொண்டால், அவர் அந்த திருமணத்தை கலப்படம் செய்துவிடுகிறார்.



இதில் தவறு செய்யாதவர் மருமணம் செய்தால் அது பாவமாகாது ஆனால் தவறு செய்தவரோ மருமணம் செய்தால் அது பாவமாகும். ஆனால், **வேசித்தன முகாந்தரத்திரமில்லாமல் வேறு காரணங்களுக்காக மனைவியைத் தள்ளிவிட்டால்** அந்தப்பெண்ணும் அவளை திருமணம் செய்யும் இரண்டாவது கணவரும் விபசாரம் செய்கிறார்கள் என்று கருதப்படும். ஏனென்றால் **தள்ளிவிடுதலுக்கு ஒரே ஒரு காரணம் மட்டுமே இருக்க வேண்டும் என்று இயேசு கிறிஸ்து சொல்கிறார்- அது தான் வேசித்தனம் (திருமணத்தை கலப்படம் செய்தல்).**

இயேசு கிறிஸ்து **"நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்"** என்று நியாயப்பிரமாணத்தின் கட்டளைகளை ஒப்பிட்டு ஏன் வலியுருத்துகிறாரென்றால், திருமணம் என்ற விஷயத்தில் நியாயப்பிரமாணத்தின் அனேக கட்டளைகளை நாம் இன்றைய நடைமுறை வாழ்க்கையில் பின்பற்றுவதில்லை.

உதாரணமாக **உபாகமம் 25: 5**ஐ ஆராய்வோம். **"சகோதரர் ஒன்றாய்க் குடியிருக்கும்போது, அவர்களில் ஒருவன் புத்திர சந்தானமில்லாமல் மரித்தால், மரித்தவனுடைய மனைவி புறத்திலிருக்கிற அந்நியனுக்கு மனைவியாகக் கூடாது; அவளுடைய புருஷனின் சகோதரன் அவளைத் தனக்கு மனைவியாகக் கொண்டு, அவளிடத்தில் சேர்ந்து, புருஷனுடைய சகோதரன் செய்யவேண்டிய கடமையைச் செய்யக்கடவன்."** மோசேயின் நியாயப்பிரமாணத்திலுள்ள இந்த கட்டளையை எப்படி நாம் இப்பொழுது பின்பற்றவில்லையோ அதே போல, திருமணம் சார்ந்த மற்ற பிரச்சனைகளுக்கும் நியாயப்பிரமாணத்தின் கட்டளைகளை நாம் பின்பற்ற வேண்டியதில்லை. அவைகளை நாம் யூத மக்களுக்கே விட்டுவிடுவோம்.

## இயேசு கிறிஸ்துவின் நேரடியான வலியுருத்துகிற வார்த்தைகளையே நாம் பின்பற்ற வேண்டும்.

இப்பொழுது நாம் இந்த விஷயத்தைப் பற்றி இயேசு கிறிஸ்து சொல்லிய அடுத்த வசனத்தை குறித்து தியானிப்போம். **மத்தேயு 19:1-3 :**

**"1 இயேசு இந்த வசனங்களைச் சொல்லிமுடித்த பின்பு, அவர் கலிலேயாவை விட்டு யோர்தானுக்கு அக்கரையான யூதேயாவின் எல்லைகளில் வந்தார்.**

**2 திரளான ஜனங்கள் அவருக்குப் பின் சென்றார்கள்; அவ்விடத்தில் அவர்களைச் சொஸ்தமாக்கினார். அப்பொழுது, பரிசேயர் அவரைச் சோதிக்கவேண்டுமென்று அவரிடத்தில் வந்து: புருஷனானவன் தன் மனைவியை எந்த முகாந்தரத்தினாலாகிலும் தள்ளிவிடுவது நியாயமா என்று கேட்டார்கள்.**

**3.**அவரை சோதிக்கும்படி பரிசேயர் இக்கேள்வியை கேட்டனர்.

**எந்த ஒரு காரணத்திற்காகவோ அல்லது எல்லா காரணங்களுக்காகவுமே தள்ளிவிடுவது சரியானதா என்பது தான் அந்த கேள்வியின் பொருளாகும்.**

அக்காலங்களில் ஷம்மாய்ட் மற்றும் ஹில்லெல் (Shammaite *and* Hillel ) என்ற இரண்டு முக்கியமான ரபினிய பள்ளிகள் (Rabbinical schools) யூதர்கள் மத்தியில் இருந்தன.

**ஷம்மாய்ட் பிரிவினர் தள்ளிவிடுதலுக்கு வேசித்தனம் மட்டுமே ஒரே காரணமாக இருக்கவேண்டும் என்று கருதினர்.**

**ஹில்லெல் பிரிவினர் மனைவி எந்தவிதத்திலாவது தனக்கு பிடிக்காத செயல்களை செய்தாலும் அவளை எழுத்துப்பூர்வமாக ஒரு தள்ளுதல் சீட்டுக்கொடுத்து தள்ளிவிடலாம் என்று கருதினர். இன்று வரை இது இஸ்ரயேலில் ஒரு வாதத்திற்குறிய விஷயமாக உள்ளது.**

இக்கேள்விக்கு இயேசு கிறிஸ்து மிகவும் ஜாக்கிரதையாக பதிலளித்தார். நாம் **மத்தேயு 19:4-6** வரை வாசிக்கலாம்.

***"அவர்களுக்கு அவர் பிரதியுத்தரமாக: ஆதியிலே மனுஷரை உண்டாக்கினவர் அவர்களை ஆணும் பெண்ணுமாக உண்டாக்கினார் என்பதையும், இதினிமித்தம் புருஷனானவன் தன் தகப்பனையும் தாயையும் விட்டுத் தன் மனைவியோடே இசைந்திருப்பான்; அவர்கள் இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள் என்று அவர் சொன்னதையும், நீங்கள் வாசிக்கவில்லையா? இப்படி இருக்கிறபடியால், அவர்கள் இருவராயிராமல், ஒரே மாம்சமாயிருக்கிறார்கள்; ஆகையால்,***

## தேவன் இணைத்ததை மனுஷன்

## பிரிக்காதிருக்கக்கடவன் என்றார்."

எந்த அதிகாரத்திற்கு இங்கு இயேசு கிறிஸ்து செல்கிறார்? மோசேயினால் எழுதப்பட்ட ஆதியாகமத்தில் குறிப்பிடப்பட்ட **பிதாவாகிய தேவனின் அதிகாரத்தை** அவர் மேற்கோள் காட்டுகிறார்.


பிதாவாகிய தேவன மனுஷனையும் மனுஷியையும் உண்டாக்கி இனைத்து ***"அவர்கள் ஒரே மாம்சமாயிருப்பார்கள்" (ஆதியாகமம் 2:24)*** என்று ஆசீர்வதித்தார். ***"தன் மனைவியோடே இசைந்திருப்பான்"*** என்பது இருவரும் ஒட்டப்பட்டுள்ளனர் என்பதை குறிக்கின்றது. இதுவே நம் பிதாவின் நோக்கமாகும்.




எனவே தான், நம் இயேசு கிறிஸ்து **வேசித்தன முகாந்திரமல்லாமல் வேறு காரணங்களுக்காக தள்ளிவிடுதல்(விவாகரத்து) மற்றும் மறுமணம் செய்யக்கூடாது என்று நமக்கு வலியுருத்துகிறார்.**

இப்பொழுது **மத்தேயு 19: 7 மற்றும் 8 ஆம்** வசனங்களைப் பார்ப்போம். **அதற்கு அவர்கள்: அப்படியானால், தள்ளுதற்சீட்டைக்கொடுத்து, அவளைத் தள்ளிவிடலாமென்று மோசே ஏன் கட்டளையிட்டார் என்றார்கள்.**

அதற்கு அவர்: உங்கள் மனைவிகளைத் தள்ளிவிடலாமென்று உங்கள் இருதயக்கடினத்தினிமித்தம் மோசே உங்களுக்கு இடம் கொடுத்தார்; ஆதிமுதலாய் அப்படி இருக்கவில்லை. **பிதாவாகிய தேவன் இணைத்த திருமணத்தை மனிதன் தன் தவறால் பிரிக்க நினைக்கிறானேயல்லாமல் அவர் பிரிக்க நினைப்பதில்லை.** அவர்களது இருதயக்கடினத்தினிமித்தம்(பிடிவாதம்) இக்கட்டளைகொடுக்கப்பட்டது.




மேலும் **9ஆம்** வசனத்தைப் படிக்கலாம் **"ஆதலால், எவனாகிலும் தன் மனைவி வேசித்தனஞ்செய்ததினிமித்தமேயன்றி, அவளைத் தள்ளிவிட்டு**

**வேறொருத்தியை விவாகம் பண்ணினால், அவன் விபசாரம் பண்ணுகிறவனாயிருப்பான்; தள்ளிவிடப்பட்டவளை விவாகம் பண்ணுகிறவனும் விபசாரஞ்செய்கிறவனாயிருப்பான் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்."** **மத்தேயு 5**ஆம் அதிகாரத்தில் சொல்லப்பட்ட அதே கருத்தை இங்கும் நாம் பார்க்கலாம்.

**தேவனால் அங்கீகரிக்கப்படாத இந்த காரியங்களை உலகத்தார் செய்கிறார்கள் <u>ஆனால் சபையாக அழைக்கப்பட்ட நாம் இவைகளை செய்யக்கூடாது. உடன்படிக்கை செய்து ஆவியில் பிறந்த ஒருவர் தேவனால் அங்கீகரிக்கப்படாத இந்த காரியங்களை செய்வதால் நித்திய ஜீவனுக்குரிய நலங்களை இழந்து விடுவார்.</u>**

**நாம் உலகத்தாரைப் பற்றி அல்ல, இயேசு கிறிஸ்துவின் சீஷர்கள் என்றும் பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெற்றவர்கள் என்றும் உரிமைகோருபவர்களைப் பற்றியே பேசுகிறோம். அப்படிப்பட்டவர்கள் தேவனுடைய இந்த வசனங்களின் மூலம் எச்சரிக்கையடைந்து அவைகளுக்கு இசைவாய் தங்களுடைய வாழ்கையை சீர் படுத்திக்கொள்ள வேண்டும்.**

இந்த பாவங்களிலிருந்து வெளியே வரும்பொழுது மாம்சத்தின் பிரகாரமாக அநேக பாடுகளும் கண்ணீரும் தனிமையும் மனவலியும் ஏற்படும் ஆனால் இவை அனைத்தையும் ஈடுசெய்ய ஒரு நம்பிக்கையுண்டு. அது தான் சரியான பாதையில் சென்றால் தேவன் அதை அங்கீகரிப்பார் என்று உணரும்போது வரும் சந்தோஷம்.

பிதாவாகிய தேவன் அங்கீகரிக்கும், எதிபார்க்கும் மற்றும் இயேசு கிறிஸ்து வலியுருத்தும் ஒரு பரிசுத்த தரநிலைக்கேற்ற வாழ்கை வாழ்கிறோம் என்று அறிவது சந்தோஷத்தை தருகிறது. நீதியினிமித்தம் துன்பப்படுவது புத்திரத்துவத்தின் அடையாளம் ஆகும். வேசித்தனஞ்செய்ததினிமித்தமேயன்றி, தள்ளிவிடுவது பாவம் என்று இயேசு கிறிஸ்து சொல்லிய பொழுது **மத்தேயு 19:4-6ல் பரிசேயர்கள் அல்ல மாறாக அவருடைய சீஷர்களே ஒரு வியத்தகு கேள்வியை கேட்டனர்.**

**"மனைவியைப்பற்றிப் புருஷனுடைய காரியம் இப்படியிருந்தால், விவாகம் பண்ணுகிறது நல்லதல்ல என்றார்கள்."**

**Are you Hard Hearted?**

வேறு எந்த ஒரு காரணத்திற்காகவும் மனைவியிடமிருந்து ஒரு கணவன் விடுதலை பெற்றுக்கொள்ளவே வாய்ப்பில்லையா என்று அவர்கள் நினைத்திருப்பார்கள்!


**திருமண பந்தத்திலிருந்து வெளியே வரவே முடியாதென்றால் அதற்கு திருமணமே செய்யாமலிருக்கலாமே என்பது இதன் பொருளாகும்.**

ஒருவேளை இயேசு கிறிஸ்து, "**ஒரு சில சமயங்களில் வேசித்தனமல்லாமல் வேறு காரணங்களுக்கு கூட தள்ளிவிடலாம் என்று பதிலளித்திருக்கலாம், ஆனால் அவர் அப்படிச் சொல்லவில்லை.** அவர் பின்வருமாறு கூறினார்:

**மத்தேயு 19:11, 12** அதற்கு அவர் **வரம் பெற்றவர்களே தவிர மற்றவர்கள் இந்த வசனத்தை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். தாயின் வயிற்றிலிருந்து அண்ணகர்களாய்ப் பிறந்தவர்களும் உண்டு** (இயற்கையாகவே அவர்கள் தனித்திருப்பார்கள்) **மனுஷர்களால் அண்ணகர்களாக்கப்பட்டவர்களும் உண்டு**

(அக்காலங்களில் **தங்களுடைய மனைவிகளையும் மருமனையாட்டிகளையும் காவல் காப்பதற்காக பல இராஜாக்களும் அதிகாரமுடைய மனிதர்களும் தங்களிடம் வேலைப்பார்க்கும் காப்பாளர்களுக்கு ஆண்மை நீக்கம் செய்தனர்**) ; **பரலோகராஜ்யத்தினிமித்தம் தங்களை அண்ணகர்களாக்கிக்கொண்டவர்களும் உண்டு (இயேசு கிறிஸ்து பரலோகராஜ்யத்தினிமித்தம் திருமணம் செய்யாது வாழ்ந்தார்); இதை ஏற்றுக்கொள்ள வல்லவன் ஏற்றுக்கொள்ளக்கடவன் என்றார்.**

அப்போஸ்தலர் பவுல் இதைக்குறித்து **1 கொரிந்தியர் 7:7 10 வசனங்களில்** சொல்கிறார். திருமணமே செய்யாதிருப்பது உங்கள் விருப்பமாயிருந்தால் அப்படியே இருந்து விடலாம் ஆனால் திருமணம் செய்தபின் மனைவியை வேசித்தனமல்லாமல் வேறு எந்த காரணங்களுக்காகவும் தள்ளிவிடக்கூடாது.



இயேசு கிறிஸ்து **மாற்கு 10: 11 மற்றும் 12ஆம் வசங்களில்** பின்வருமாறு கூருகிறார்**: -**

**"அப்பொழுது அவர்: எவனாகிலும் தன் மனைவியைத் தள்ளிவிட்டு, வேறொருத்தியை விவாகம்பண்ணினால், அவன் அவளுக்கு விரோதமாய் விபசாரஞ்செய்கிறவனாயிருப்பான் மனைவியும் தன் புருஷனைத் தள்ளிவிட்டு, வேறொருவனை விவாகம்பண்ணினால், விபசாரஞ்செய்கிறவளாயிருப்பாள் என்றார். "**

ஆண்கள் மட்டுமே தள்ளிவிடதலுக்கு காரணமென்று பொதுவாக நாம் நினைக்கக்கூடும் ஆனால் பெண்களும் அவ்வாறு செய்வார்களென்றால் அதுவும் பாவமே என்று நம் இரட்சகர் கூறுகிறார்.

அப்போஸ்தலர் பவுல் இதைக்குறித்து **1கொரிந்தியர் 7:10ல் என்ன** கூறினார் என்று பார்ப்போம். **"விவாகம்பண்ணிக்கொண்டவர்களுக்கு நானல்ல, கர்த்தரே கட்டளையிடுகிறதாவது: மனைவியானவள் தன் புருஷனை விட்டுப் பிரிந்துபோகக்கூடாது.**

**11 - பிரிந்துபோனால் அவள் விவாகமில்லாதிருக்கக்கடவள், அல்லது புருஷனோடே ஒப்புரவாகக்கடவள்; புருஷனும் தன் மனைவியைத் தள்ளிவிடக்கூடாது."**

அப்போஸ்தலர் பவுல் பிரிந்து போனாலும் தனித்திருக்கவேண்டும் என்றும் கொஞ்ச நாட்களில் மீண்டும் ஒப்புரவாகிவிடவேண்டும் **ஆனால் நிறந்தரமாக தள்ளிவிடக்கூடாது என்றும் கூறுகிறார்.** இன்றய நாட்களில் கூட அமெரிக்கா தேசத்தில் **legal separation** என்று ஒரு சட்ட அமைப்பு உள்ளது. அதன்படி கணவனும் மனைவியும் விவாகரத்து கொடுக்காமலே பிரிந்து வாழலாம். ஒரு வேளை அவர்கள் ஒப்புரவாகிவிட்டால் மீண்டும் சேர்ந்து வாழலாம்.



இப்பொழுது 12ஆம் வசனத்திற்கு போவோம். ***மற்றவர்களைக்குறித்துக் கர்த்தர் அல்ல, நானே சொல்லுகிறதாவது:*** என்று அவர் சொல்கிறார். ***அப்படியென்றால் நம்முடைய இரட்சகருடைய கருத்துக்கு முரண்பாடாக அப்போஸ்தலர் பவுல் ஏதாவது சொல்கிறாரா? – அப்படியல்ல. "மற்றவர்களைக்குறித்து"*** என்ற வார்த்தைக்கு பதிலாக கிரேக்க டியக்லோட்டில் ***"மற்ற விஷயங்கள்"*** **Remaining matters** என்ற வார்த்தைகள் கொடுக்கப்பட்டுள்ளன. அப்படியென்றால் அப்போஸ்தலர் பவுல் கிறிஸ்துவர்களாக புதிதாக மாறிய தம்பதியினருக்கு பரிசுத்தமாக்கப்பட்டு அப்போஸ்தலர்களாக அழைக்கப்பட்டவர்களுக்கு இருக்க வேண்டிய மற்ற விஷயங்களை குறித்த பொதுவான அறிவைப் பற்றி சொல்கிறார்.

இப்பொழுது **12ஆம் வசனத்தின் பின்பகுதியிலிருந்து 14ஆம்** வசனம் வரை வாசிப்போம். ***"சகோதரனொருவனுடைய மனைவி அவிசுவாசியாயிருந்தும், அவனுடனே வாசமாயிருக்க அவளுக்குச் சம்மதமிருந்தால், அவன் அவளைத் தள்ளிவிடாதிருக்கக்கடவன். அப்படியே ஒரு ஸ்திரீயினுடைய புருஷன் அவிசுவாசியாயிருந்தும், அவளுடனே வாசமாயிருக்க அவனுக்குச் சம்மதமிருந்தால், அவள் அவனைத் தள்ளிவிடாதிருக்கக்கடவள். என்னத்தினாலெனில், அவிசுவாசியான புருஷன் தன் மனைவியால் பரிசுத்தமாக்கப்படுகிறான்; அவிசுவாசியான மனைவியும் தன் புருஷனால் பரிசுத்தமாக்கப்படுகிறாள். இல்லாவிட்டால் உங்கள் பிள்ளைகள் அசுத்தமாயிருக்குமே; இப்பொழுதோ அவைகள் பரிசுத்தமாயிருக்கின்றன."***

ஒரு வேளை அவிசுவாசியான ஒருவரை திருமணம் செய்திருந்தால் அதற்காக அவரை தள்ளிவிடக்கூடாது. தேவனிடத்தில் நீங்கள் கொண்டுள்ள விசுவாச உறவின் அளவின் அடிப்படையில் உங்கள் பிள்ளைகளோடு தேவன் தனது அன்பின் உறவை நிலைநாட்டுவார். இதில் அவிசுவாசியான உங்கள் வாழ்க்கை துணையின் பங்களிப்பு நிச்சயம் இருக்காது.

தொடர்ந்து ***15ஆம் மற்றும் 16ஆம் வசனங்களை*** வாசிப்போம்.
***"ஆகிலும், அவிசுவாசி பிரிந்துபோனால் பிரிந்துபோகட்டும், இப்படிப்பட்ட விஷயத்தில், சகோதரனாவது சகோதரியாவது அடிமைப்பட்டவர்களல்ல. சமாதானமாயிருக்கும்படிக்கே தேவன் நம்மை அழைத்திருக்கிறார்.***

***மனைவியானவளே, நீ உன் புருஷனை இரட்சிப்பாயோ அல்லவோ உனக்கு எப்படித் தெரியும்? புருஷனே, நீ உன் மனைவியை இரட்சிப்பாயோ அல்லவோ உனக்கு எப்படித் தெரியும்?"***

இந்த வசனங்களை தவறாக சிலர் புரிந்து கொண்டுள்ளனர். எப்படியென்றால் **"அடிமைப்பட்டவர்களல்ல"** என்ற வார்த்தை அவிசுவாசி வேசிதனம் செய்யாதவராக இருந்து வேறு காரணத்திற்காக பிரிந்தப்போனால் விசுவாசியான புருஷனோ அல்லது மனைவியோ அந்த திருமண உறவிற்கு கட்டுப்பட்டவர்களில்ல மாறாக வேறு திருமணம் செய்து கொள்ளலாம் என்று தவறாக சிலர் புரிந்து கொண்டுள்ளனர்.

ஆனால் **"அடிமைப்பட்டவர்களல்ல"** என்ற வார்த்தைக்கு அர்த்தம் என்னவென்றால் ஒரு விசுவாசி அந்நிய நுகத்திலே அவிசுவாசியுடன் பிணைக்கப்படுவதால் தான் சுமந்த பாரத்திலிருந்து விடுபட்டு தேவனிடத்தில் அதிகமாக நெருங்கி அவருக்கு சேவை செய்யும் உன்னத பாக்கியத்தை பெற்றுக்கொள்ளவேண்டும் என்பதே.

***ரீப்பிரின்ட்ஸ் 1554***ல் சகோதரர் ரஸ்ஸல் இதை குறித்து பின்வருமாறு கூறுகிறார்: இப்படி தன்னை கைவிட்டுவிட்டுப் போன ஒரு புருஷனை ஒரு மனைவி மீண்டும் ஏற்றுக்கொள்ள **அடிமைப்பட்டவளல்ல. 1 கொரிந்தியர் 7:11ல் சொல்லியபடி அவர்கள் விரும்பினால் ஒப்புரவாகி மீண்டும் வாழலாம் ஆனால் அவர்கள் இருவருமே மருமணம் செய்யக்கூடாது.** முடிவாக, இந்த விஷயத்தைப் பற்றி அப்போஸ்தலர் பவுல் **1 கொரிந்தியர் 7:39ல்** பின்வருமாறு கூறுகிறார்: **மனைவியானவள் தன் புருஷன் உயிரோடிருக்குங்காலமளவும் பிரமாணத்தினால் கட்டப்பட்டிருக்கிறாள்; தன் புருஷன் மரித்தபின்பு தனக்கு இஷ்டமானவனாயும் கர்த்தருக்குட்பட்டவனாயுமிருக்கிற எவனையாகிலும் விவாகம்பண்ணிக்கொள்ள விடுதலையாயிருக்கிறாள்.**



**வேசித்தனம் செய்தவரை தள்ளிவிட்டு (விவாகரத்து செய்துவிட்டு) தவறு செய்யாதவர் மருமணம் செய்யலாம் என்று இயேசு கிறிஸ்து கூறுகிறார். அப்போஸ்தலர் பவுல் புருஷனோ அல்லது மனைவியோ மரித்தபின்பு மருமணம் செய்யலாம் என்று கூறுகிறார். ஆகவே இங்கு தேவனால் அங்கீகரிக்கப்படும் மருமணத்திற்கு இரண்டு காரணங்கள் உள்ளன – வேசித்தனம் மற்றும் மரணம்.**

**1 கொரிந்தியர் 7:39ஆம் வசனத்தில் வரும் "பிரமாணத்தினால்" என்ற வார்த்தை சினியாடிக், வத்திக்கான்1209 மற்றும் அலெக்ஸாண்ட்ரியன் கையெழுத்துப் பிரதிகளில் இல்லை. இது "தவறாக சேர்க்கப்பட்ட வார்த்தையாகும்.**

இப்பொழுது நாம் **ரோமர் 7:1 முதல் 3 வசனங்களை** ஆராய்வோம். **"நியாயப்பிரமாணத்தை அறிந்திருக்கிறவர்களுடனே பேசுகிறேன். சகோதரரே, ஒரு மனுஷன் உயிரோடிருக்குமளவும் நியாயப்பிரமாணம் அவனை ஆளுகிறதென்று அறியாமலிருக்கிறீர்களா? அதெப்படியென்றால், புருஷனையுடைய ஸ்திரீ தன் புருஷன் உயிரோடிருக்குமளவும் நியாயப்பிரமாணத்தின்படியே அவனுடைய நிபந்தனைக்கு உட்பட்டிருக்கிறாள்; புருஷன் மரித்த பின்பு புருஷனைப்பற்றிய பிரமாணத்தினின்று விடுதலையாயிருக்கிறாள். - ஆகையால், புருஷன் உயிரோடிருக்கையில் அவள் வேறொரு புருஷனை விவாகம்பண்ணினால் விபசாரியென்னப்படுவாள்; புருஷன் மரித்தபின்பு அவள் அந்தப் பிரமாணத்தினின்று விடுதலையானபடியால், வேறொரு புருஷனை விவாகம் பண்ணினாலும் விபசாரியல்ல."**

நியாயப்பிரமாணத்திற்கு உட்ப்பட்ட யூதருடைய பழைய உடன்படிக்கையாகிய மோசேயின் உடன்படிக்கையைப் பற்றி பேசுகிறார். இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளும் யூதர்கள் கிருபையின் உடன்படிக்கைக்குள் பிரவேசிக்கலாம் என்று கூருகிறார். ஒருவர் இந்த இரண்டில் ஏதாகிலும் ஒரு உடன்படிக்கையின் கீழ் தான் இருக்க முடியும் இங்கு 1 கொரிந்தியர் 7ஆம் அதிகாரத்தில் சொல்லப்பட்ட அதே விஷயத்தைப் பற்றி மீண்டும் ஒரு முறை அப்போஸ்தலர் பவுல் கூருகிறார். புருஷனோ அல்லது மனைவியோ மரித்தபின்பு மருமணம் செய்யலாம் என்று கூறுகிறார்.

**தன்னை கைவிட்டுவிட்டுப் போன ஒரு புருஷனை ஒரு மனைவி மீண்டும் ஏற்றுக்கொள்ள அடிமைப்பட்டவளல்ல. ஆனால் அவர்கள் இருவருமே மருமணம் செய்யக்கூடாது.**

இப்பொழுது நாம் **லூக்கா 16: 16 முதல் 18 வசனங்களில்** இயேசு கிறிஸ்து இதைப் பற்றி என்ன கூறுகிறார் என்று பார்ப்போம். **"நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசன வாக்கியங்களும் யோவான்வரைக்கும் வழங்கிவந்தது; அதுமுதல் தேவனுடைய ராஜ்யம் சுவிசேஷமாய் அறிவிக்கப்பட்டுவருகிறது, யாவரும் பலவந்தமாய் அதில் பிரவேசிக்கிறார்கள். வேதத்தில் ஒரு எழுத்தின் உறுப்பு அவமாய்ப் போவதைப்பார்க்கிலும், வானமும் பூமியும் ஒழிந்துபோவது எளிதாயிருக்கும்.**

**தன் மனைவியைத் தள்ளிவிட்டு, வேறொருத்தியை விவாகம்பண்ணுகிறவன் விபசாரஞ்செய்கிறான், புருஷனாலே தள்ளப்பட்டவளை விவாகம்பண்ணுகிறவனும் விபசாரஞ்செய்கிறான்."**




இயேசு கிறிஸ்து இந்த அதிகாரத்தில் பல உவமைகளையும் யூத ஆசாரியர்களுடைய மனக்கடினத்தைப் பற்றியும் அவர்கள் எவ்வாறு இஸ்ரயேல் மக்களை தவறாக வழி நடத்தினர் என்பதை பற்றியும் பேசினார். அவர்கள் யூத யுகம் முடிந்து சுவிசேஷ யுகம் தொடங்கிவிட்டதை உணராமல் தங்கள் மனக்கண்கள் குருடாக்கப்பட்டவர்களாயிருக்கிறார்கள் என்று இங்கு உணர்த்துகிறார்.

அடுத்த உவமையாக ஐசுவரியவான் லாசரு உவமையை கூறினார். பரிசேயர்களிடத்தில் இந்த யுகங்களைப் பற்றி உரையாடும்போது தள்ளிவிடுதல், மருமணம் மற்றும் விபசாரத்தைப் பற்றி அவர் ஏன் பேசுகிறார் என்று நாம் நினைக்கக்கூடும்.

**இதை குறித்து சகோதரர் ரஸ்ஸல் ரீப்பிரின்ட்ஸ் 2716ல் பின்வருமாறு கூறுகிறார்: இயேசு கிறிஸ்து யுகங்களின் மாற்றத்தை பரிசேயருக்கு உணர்த்தவே இவைகளைப்பற்றி பேசுகிறார். யூத யுகம் முடிந்து சுவிசேஷ யுகம் தொடங்கிவிட்டதை இஸ்ரயேல் தேசம் உணர்ந்து கொள்ள வேண்டும். அவர்கள் ஏதாகிலும் ஒரு உடன்படிக்கையின் கீழ் தான் இருக்க முடியும் என்று உணர்த்தவே இவைகளைப் பற்றி பேசினார். நீங்கள் மேற்கொண்டு இதைப் பற்றி விரிவாக ரீப்பிரின்ட்ஸை படித்து தெரிந்து கொள்ளுங்கள். அப்போஸ்தலர் பவுல் ரோமர் 7ஆம் அதிகாரத்தில் யுகங்களின் மாற்றத்தை விளக்குவதற்காக உடன்படிக்கைக்கு கனவன் மனைவியின் உறவை திருஷ்டாந்தப்படுத்துகிறார்.**

**லூக்கா 16: 16 முதல் 18 வசனங்களில் இயேசு கிறிஸ்து இஸ்ரயேல் தேசத்திற்கும் பிதாவாகிய தேவனுக்கும் இடையே உள்ள உடன்படிக்கையை ஒரு மனைவிக்கும் புருஷனுக்கும் உள்ள திருமண பந்தத்திற்கு ஒப்பிட்டு பேசுகிறார்.**

***இஸ்ரயேல் மக்கள் மனிதனுடைய உபதேசமாகிய பரிசேயர்களின் உபதேசத்தை பின்பற்றியது பிதாவாகிய தேவனுக்கு விரோதமாக வேசித்தனம் செய்தது போலாகும் என்று அவர் உணர்த்த விரும்பினார்.***




எனவே தான் **மத்தேயு 5ஆம் மற்றும் 19**ஆம் அதிகரங்களிலும் திருமண பந்தத்தை குறித்து அவர் பேசினார். இதே போன்ற ஒரு ஒப்பீட்டை **எபேசியர் 5ஆம்** அதிகாரத்தில் பவுல் செய்கிறார்.

அவர் திருமண பந்தத்தை கிறிஸ்து மற்றும் அவருடைய மணவாட்டியாகப்போகும் சபைக்கு ஒப்பிட்டு பேசுகிறார்.

இப்பொழுது நாம் **எபேசியர் 5: 21 முதல் 23** வசனங்களை வாசிப்போம். ***"தெய்வ பயத்தோடே ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்திருங்கள். மனைவிகளே, கர்த்தருக்குக் கீழ்ப்படிகிறதுபோல, உங்கள் சொந்தப் புருஷருக்குங் கீழ்ப்படியுங்கள். கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கிறதுபோல, புருஷனும் மனைவிக்குத் தலையாயிருக்கிறான்; அவரே சரீரத்திற்கும் இரட்சகராயிருக்கிறார்."***



தொடர்ந்து இந்த அதிகாரத்தை வாசிக்கும் பொழுது நாம் உணர்ந்துகொள்ளும் விஷயம் என்னவென்றால்

**இயேசு கிறிஸ்து தன்னுடைய மனவாட்டியகிய சபையை ஒரு போதும் பிரிந்துபோக மாட்டார்.**
**அதே போல் மனவாட்டியகிய சபை வகுப்பாரும் ஒருபோதும் இயேசு கிறிஸ்துவை விட்டு பிரிந்துபோக மாட்டார்கள்.**

**ஆம், சபையாகிய நாம் அவரோடு இணைந்துள்ளோம்.**

**ஒருவேளை பிரிந்து போனால் அதற்கு என்ன அர்த்தம்?**
**– வேசித்தனம், சோரம் போதல் –**
**மகா பாபிலோனைப்போல்.**

**திருமணத்தைப் பற்றிய பிதாவாகிய தேவனின் நோக்கம் என்னவென்றால்,**
**"அவர்கள் இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள்"**
**என்பது தான்.**

**அப்படியென்றால் அன்பு சகோதர சகோதரிகளே, ஒருவேளை பிரச்சனைகள் நிறைந்த திருமண உறவில் வாழ்ந்து கொண்டு அதிலிருந்து விடுபட்டு (விவாகரத்து பெற்று) வேறு திருமணம் செய்யலாம் என்று எண்ணிக்கொண்டிருக்கிறீர்களா?**




**தயவு செய்து இந்த வேத வசனங்களின் மூலம் திருமணத்தைப் பற்றி தேவனுடைய நோக்கத்தை அறிந்த கொண்ட நீங்கள் அதற்கு கீழ்படிந்து அந்த எண்ணத்தை விட்டுவிடுவீர்களானால், இயேசு கிறிஸ்து மற்றும் சபையின் ஐக்கியத்தின் அடையாளமாகிய திருமணத்தை நிலைநாட்டுவதில் நீங்களும் ஒரு பங்குவகிக்கிறீர்கள் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.**

பிரச்சனைகள் நிறைந்த திருமண உறவில் மன உளைச்சல்அடையும் வேளைகளில் அந்த உறவை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல உங்களை திடப்படுத்துவது திருமணம் என்பது கிறிஸ்து மற்றும் சபையின் ஐக்கியத்தின் திருஷ்டாந்தமாக இருக்கிறது என்ற இந்த சத்தியம் தான்.

ஒரு வேளை உங்கள் வாழ்க்கைத் துணை உங்களுக்கு மிகப் பெரிய சோதனையாக இருப்பினும் நீங்கள் தேவ வார்த்தைக்கு கீழ்ப்படிந்து உங்கள் திருமணத்தை நிலைநாட்டுவீகள் என்றால் தேவன் நிச்சயம் உங்களுக்கு அதற்கேற்ற பலனை அளிப்பார்.

ரோமர் 7ஆம் அதிகாரத்தில் சொல்லப்பட்டதைப் போல இது உடன்படிக்கையையும் திருஷ்டாந்தப்படுத்துகிறது.

திருமணமத்தை கிறிஸ்து மற்றும் சபையின் ஐக்கியத்திற்கும் இஸ்ரயேல் தேசத்திற்கும் பிதாவாகிய தேவனுக்கும் இடையே உள்ள உடன்படிக்கைக்கும் திருஷ்டாந்தமாக தேவன் நமக்கு வைத்திருக்கிறார்.


நாம் திருமணத்தை நிலைநாட்டுவதின் மூலம் அவருடைய திட்டங்களை திருஷ்டாந்தப் படுத்துகிறோம்.

யோவான் 8ஆம் அதிகாரம் 1 முதல் 12ஆம் வசனங்களில் நாம் வாசிக்கும்



விபசாரம் செய்த ஒரு ஸ்திரீயை கல்லெறியும்படி இயேசு கிறிஸ்துவிற்கு முன் கொண்டுவந்தார்கள் என்ற **சம்பவம் சினியாடிக், வத்திக்கான்1209 மற்றும் அலெக்ஸாண்ட்ரியன் கையெழுத்துப் பிரதிகளில் இல்லை.**

**இது "தவறாக சேர்க்கப்பட்ட சம்பவமாகும். எனவே அதைப் பற்றி நாம் ஆராய வேண்டியதில்லை.**



தாவீது ராஜா பத்சேபாளோடு வேசித்தனம் செய்திருந்தாலும் தேவன் அவளை தள்ளிவிடசொல்லவில்லையே என்று சிலர் சொல்லக்கூடும். தாவீதிற்கு அநேக மனைவிகள் இருந்தார்கள். யூத யுகத்தில் பல திருமணங்கள் என்பது நடைமுறையில் இருந்தது.

நிச்சயமாக இப்படிப்பட்ட காரியம், சபைக்கு ஏற்றதாக இருக்காது. சபையைப் போல தாவீது ராஜா நித்திய வாழ்விற்கான அல்லது இரண்டாம் மரணமாகிய நித்திய அழிவுக்கான நியாயத்தீர்ப்புக்கடியில் வாழவில்லை. மத்தியஸ்தராக இயேசு கிறிஸ்துவின் சரீர அங்கங்களாக, அவரைப்போலாக வேண்டும் என்று பிரயாசப்பட, சோதனைகளை சகிக்கும் சபையாவதற்கு தாவீது ராஜா அழைக்கப்படவில்லை.



தாவீது ராஜா தன் தவறுக்காக வருந்தினார். தேவனுக்கு உன்மையுள்ளவராக வாழ்ந்தார் **ஆனால் பல திருமணங்கள் செய்யலாம் என்று அவருடைய வாழ்க்கையை உதாரணமாக எடுத்துக் கொள்ளக்கூடாது.** DON'T DO IT.

**இயேசு கிறிஸ்து மத்தேயு 5ஆம் அதிகாரத்தில் "நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்று சொல்கிறார். அவருடைய வார்த்தைகளையே நாம் பின்பற்ற வேண்டும்.**

பழைய ஏற்ப்பாட்டில் **எஸ்ரா 9 மற்றும் 10ஆம் அதிகாரங்களில்** எஸ்ரா புறஜாதி பெண்களை திருமணம் செய்த இஸ்ரயேலர்களை அவர்களை தள்ளிவிடும்படி செய்ததை சிலர் ஒரு உதாரணமாக முன்வைக்கலாம். இதையும் கிறிஸ்துவர்களாகிய நாம் உதாரணமாக எடுத்துக் கொள்ளக் கூடாது.

இப்பொழுது ஒரு கேள்வி எழக்கூடும். ஒரு சகோதரனோ சகோதரியோ வேசித்தனமல்லாத ஒரு காரணத்திற்க்காக நாட்டின் சட்டவிதிகள்ப்படி விவாகரத்து பெற்று மறுமணம் செய்து இப்பொழுது தேவனுடைய அங்கீரமில்லாத இந்த காரியத்தை செய்துவிட்டோமே என்று மனஸ்தாபப்பட்டால் என்ன செய்வது**?**

**நிச்சயமாக அது நாட்டின் சட்டவிதிகள்ப்படி சரியாக எண்ணபப்பட்டாலும் தேவனால் அது வேசித்தனம் என்றே கருதப்படும்.**

**தேவனால் அங்கீகரிக்கப்படும் மருமணத்திற்கு இரண்டு காரணங்கள் உள்ளன – வேசித்தனம் மற்றும் மரணம்.**

**அப்படியென்றால் மகிழ்ச்சியற்ற அல்லது தவறான முடிவால் நடந்த திருமணத்தால் ஏற்படும் வலிகளுக்கெல்லாம் என்ன தீர்வு?**

**அது மிகுந்த வலிதான் என்று நான் ஒப்புக்கொள்கின்றேன். திருமணம் என்பது பூமிக்குறிய ஒரு உறவு தான். தேவனுடனான உன்னத உறவை மேம்படுத்தும் வகையில் அவருக்கு கீழ்படிந்து வாழ்வது அதிக மகிழ்ச்சியைத் தரும்.**


இப்படிப்பட்ட சூழ்நிலையிலுள்ளவர்கள் ரீப்பிரின்ட்ஸ் 1554 மற்றும் அதைத் தொடர்ந்து சில பக்கங்களை படிக்குமாறு நான் ஆலோசனை சொல்கிறேன்.

ஆதோடு, வேதாகமப் பாடங்கள் 6: பக்கம் 505ஐ படிக்குமாறு நான் ஆலோசனை சொல்கிறேன்.

சூழ்நிலைக்கேற்ப மாறும் நெறிமுறைகள் கொண்ட புதிய தத்துவங்கள் நிறைந்த **இன்றைய நாட்களில் நம் மனங்களை தேவனுக்கு பிரியமான முடிவுகளை எடுக்க பழக்கவேண்டும்.**



***நம்மை சுற்றியுள்ள சூழ்நிலைகள், சரி அல்லது தவறு என்று நாம் நன்று அறிந்திருக்கும் முடிவுகளையல்ல, மாறாக சாக்குப்போக்கு சொல்லும் முடிவுகளையே எடுக்கவைக்கின்றன.***



நாம் இந்த தரநிலைகளை வேதத்திற்கு ஏற்ப வைக்கிறோம் ஆனால், இப்படிப்பட்ட சூழ்நிலைகள் நம் மத்தியில் இருக்கும் பொழுதும் பள்ளிகளிலும் மற்ற இடங்களிலும் இவைகளின் மத்தியில் வாழுகின்ற நம் சிறு பிள்ளைகளிலும் வாலிபர்களிலும் ஒரு சிலருக்கு இவைகள் மிகப் பெரிய பாரமாக இருக்கும்.

**எத்தனையோ சகோதர சகோதரிகள் தாங்கள் செய்த உடன்படிக்கைக்கு கட்டுப்பட்டு தங்களுடைய திருமண வாழ்க்கையில் தங்களுடைய பாடுகளை மற்றவர்களிடம் சொல்லாமல் தேவனிடத்தில் பெலன் பெற்று அவைகளை மேற்கொண்டு ஜெயம் பெற்று அத்திருமணங்களை நிலைநாட்டிக் கொண்டிருக்கிறார்கள்.**

*நான் ஒரு விவாகரத்திற்குட்ப்பட்ட குடும்பத்திலிருந்து வருகிறேன். நான் ஒரு சிறிய பையனாக (teenager 13-19 years) இருந்த போது என் தந்தையும் தாயும் பிரிந்து விட்டனர். எனது தந்தை பரஸ்பைடெரியன் சபையில் நிரந்தரமாக தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு மூப்பராக இருந்தார். தேவனால் அங்கீகரிக்கப்படாத விவாகரத்து மற்றும் மறுமணம் ஆகியவற்றை செய்தார் ஆனால் தொடர்ந்து அவர் மூப்பர் பதவியை வகித்தார். நானும் என் அம்மாவும் பரஸ்பைடெரியன் சபை செல்வதை நிறுத்தவேண்டியதாயிற்று ஆனால் அவர் அங்கேயே தான் தன் இரண்டாவது மனைவியை அழைத்துச் சென்றார்.*

*அப்பொழுது தான் தேவன் எதிர்ப்பார்க்கும் தரநிலை பரஸ்பைடெரியன் சபையில் இல்லை என்று நான் உணர்ந்து கொண்டேன். எனவே நான் அங்கு செல்லவே இல்லை.*

*ஆனால் வேத மானவர்களாகிய உங்கள் மத்தியில் நான் போற்றக்கூடிய குணங்கள் எவையென்றால்* ***உங்கள் நீதியின் தரநிலை, நீதியின் நிமித்தம் பாடுகளை சகிக்கும் குணம் மற்றும் நற்கிரியைகளைச் செய்ய பக்திவைராக்கியமுள்ளவர்களாக இருப்பதும் தான்.*** *அப்படித்தான் நான் உங்களைப் பார்க்கிறேன், எனவே தான் இப்பாடம் நமக்கு முக்கியமானது என்று நான் கருதுகிறேன்.*

***சில முக்கியமான குறிப்பிடல்களுடன் இப்பாடத்தை நான் முடித்துக் கொள்கிறேன்:***
**VI Volume page 504, 505, 516; Reprints 3089 and Reprints 5954.**

**Discourse by Bro Ric Cunningham - Oakland Country Bible students – USA**
**Translated By – Coimbatore Bible students**

Your Brethren and Servant in Christ

Bro Victor Gnanaraj



# Coimbatore Bible Students

For Free Bible Study Contact

**bibleresearchandstudy@gmail.com**

www.biblestudentsindia.com